பக்கங்கள் 26

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 01 சனிக்கிழமை 18.10.2025 | அதிர்வு 79

## கஜேந்திரகுமார் எம்.பி. கூறுவது உண்மையல்ல என்கிறார் சுரேஷ்



தமிழ் மக்களுக்குக் குறைந்த பட்ச அதிக ாரத்தை வழங்குகின்ற மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு முன்வர வேண்டும் என 03▶

# அரசைத் தேர்தலை நடத்த வையுங்கள்!

## அனைத்துத் தமிழ்க் கட்சிகளிடம் வரதராஜப்பெருமாள் வற்புறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள அனைத்து கட்சிகளும் இலங்கையில் உள்ள அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் அரசை மாகாண சபைத் தேர்தலை நடத்த வைக்க வேண்டும்."

- இவ்வாறு இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைத் தேத்தல் தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் 02▶



### பிணைமுறி மோசடி வழக்கில் தேடப்படும் குற்றவாளியான

# அர்ஜுன் மகேந்திரனின் புதிய புகைப்படம் வெளியீடு



இலங்கையில் 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கில் தேடப்படும் குற்றவாளியான முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் புதிய புகைப்படத்தை சிரேஷ்ட ஊடகவியலாளர் உவிந்து குருகுலசூரிய தனது பேஸ்புக்கில் வெளியிட்டுள்ளார்.

உவிந்து குருகுலசூரிய, தான் சமூக ஊடகத்தில் பகிர்ந்த புகைப்படத்துடன், அர்ஜுன மகேந்திரன் சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தன்னைத் தொடர்புகொண்டார் 02▶




இலங்கை அரசாங்கம் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அராஜகங்கள், அட்டூழியங்கள், பாதிப்புகள், ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் போன்றவற்றுக்கு இழப்பீடுகளை வழங்குவோம் என்ற பெயரில் இழப்பீட்டு அலுவலகம் ஒன்றை சட்டரீதியாக உருவாக்கி, சர்வதேசத்துக்கு 'பவ்லா' காட்டும் நகர்வை முன்னெடுத்து இருக்கின்றது.

இந்த இழப்பீட்டு அலுவலகத்துக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான சர்ச்சை குறித்து சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.

அந்த இழப்பீட்டு அலுவலகத்திற்கு நல்லதோர் 'செக்' வைக்கும் நகர்வு முன்னெடுக்கப் பட்டிருக்கின்றது. 02▶



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக பாரிய மனிதப் படுகொலை குற்றத்துக்காக பாதிக்கப்பட்டவர்களுக்கு விரிவான இழப்பீட்டுக் கோரிக்கை ஒன்று அந்த அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் குடாநாட்டில் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற 'வல்வை படுகொலையில்' குறைந்தது 66 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 34 பேர் காயப்படுத்தப்பட்டனர். இந்திய அமைதிப்படை அங்கு நிலைகொண்டிருந்த சமயத்தில் இது இடம்பெற்றது.

இந்த இழப்புக்காக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு, இலங்கையின் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடம் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான (அதாவது சுமார் 450 கோடி ரூபாவுக்கான) கோரிக்கையை சமர்ப்பித்துள்ளது.

ஆயுத மோதல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மோசமான - பாரிய - அட்டூழியங்களில் ஒன்றாக, நீண்ட காலமாக வழங்கப்படாமல் இருக்கும் நீதியையும் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு இந்த விண்ணப்பத்தில் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கை சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீடுகளுக்கான கோட்பாடுகளுக்கு இணங்க கட்டமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அது பின்வருவனவற்றை உள்ளடக்கி உள்ளது:-

* சொத்து மற்றும் சட்ட ரீதியான அந்தஸ்தை மீட்டெடுத்தல்.
* அளவிடக்கூடிய இழப்புகளுக்கான இழப்பீடு.
* சுகாதார மற்றும் உளவியல் ஆதரவுக் கூடான புனர்வாழ்வு.
* திருப்தி - இந்திய அரசாங்கத்திடமிருந்தான முறையான மன்னிப்பு கோரல் உட்பட.
* சட்ட ரீதியான மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தம் ஊடாக மீண்டும் மீள நிகழாமையை உறுதிப்படுத்துதல்.

- சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டத்தினால் அண்மையில் வெளிப்படுத்தப்பட்ட 'ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்' என்ற அறிக்கையில் 1989 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான நேரடி சாட்சியங்களின் - வாக்குமூலங்களின் - ஆதாரங்களை இந்த சமர்ப்பிப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அது கொலைகள் மற்றும் காயங்களை மட்டும் விவரிக்காமல், வல்வெட்டித்துறை கரையோர நகரில் இடம் பெற்ற வீடுகள், வியாபாரங்கள், படகுகள் மற்றும் வாழ்வாதாரங்கள் பரவலாக அழிக்கப்பட்டமை பற்றியும் விவரிக்கின்றது.

அங்கு அந்தச் சமயத்தில் மூன்று நாள்கள் இடம் பெற்ற வெறியாட்டத்தில் 120 வீடுகள், 43 கடைகள், அழிக்கப்பட்டன. 250 க்கும் அதிகமான வீடுகள் சேதமாக்கப்பட்டன. பாதிக்கப்பட்டு, உயிர் பிழைத்தவர்கள் கடந்த 35 வருடங்களாக எந்த விதமான அங்கீகாரத்தையோ அல்லது பரிகாரத்தையோ பெற்றுக்கொள்ளவில்லை என்று இப்போதைய விண்ணப்பம் விவரிக்கின்றது.

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இந்த இழப்பீடுகள் பற்றிய விண்ணப்பம் விரிவாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அட்டூழியம் நடைபெற்ற போது வல்வெட்டித்துறையில் இருந்து தப்பி பிழைத்த ஆசிரியர் அனந்தராஜா இந்த விடயம் பற்றி நாளை வடமராட்சி ஊடக மையத்தில் மேலதிக விவரங்களை வெளியிட இருக்கிறார்.

அந்தச் சந்திப்பில் அவருடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் ஜஸ்மின் சூக்காவும் பங்குபற்றுவார் என்று இது தொடர்பான செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் நேரில் பங்கு பற்றுவரா அல்லது இணைய வழியில் பங்குபற்றுவாரா என்பது தெரியவில்லை.

எது, எப்படி ஆயினும் இந்த இழப்பீட்டுக் கோரிக்கை இலங்கை - இந்திய தரப்புகளுக்கு அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பது கண்கூடு.

## அர்ஜுன் மகேந்திரனின்...

என்று தெரிவித்துள்ளார்.

சிங்களத்தில் அவர் இட்ட பதிவில், அர்ஜுன் மகேந்திரன் தன்னுடன் பல விடயங்கள் குறித்துப் பேசினார் என்றும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஓர் ஆலோசனையைத் தெரிவிக்குமாறு கோரினார் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதற்குத் தான் மறுத்துவிட்டார் என்றும், இந்த உரையாடலில் பல கதைகள் இடம்பெற்றன என்றும், அர்ஜுன் மகேந்திரனைத் தனக்கு மூன்று தசாப்தங்களாகத் தெரியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் வசிக்கும் அர்ஜுன் மகேந்திரன், 2015ஆம் ஆண்டு மத்திய வங்கி பிணை முறி ஏலத்தில் முறைகேடு செய்ததன் மூலம் அரசுக்குப் பெரும் நிதி இழப்பை ஏற்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

பிணைமுறி சர்ச்சை ஏற்பட்டபோது, அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூரில் ஒரு திருமண நிகழ்வில் கலந்துகொள்ளச் செல்வதாக அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறிவிட்டுச் சென்றார். அதன் பின்னர் அவர் இலங்கைக்குத் திரும்பவில்லை.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தனது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது, அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்குக் கொண்டுவந்து சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வைப்பதாக உறுதியளித்திருந்தார்.

எனினும், இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் இரு தரப்புப் பிணைக்கைதி ஒப்பந்தம் இல்லாததைக் காரணம் காட்டி, இலங்கையின் மறுபத்திரமளிப்புக் கோரிக்கையை சிங்கப்பூர் நிராகரித்திருந்தது.

ஊடகவியலாளர் குருகுலசூரியவால் தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்தப் புதிய புகைப்படம், அர்ஜுன் மகேந்திரனை நீதிக்கு முன் கொண்டுவரும் நீண்ட கால முயற்சி குறித்த பொதுமக்களின் கவனத்தை மீண்டும் ஈர்த்துள்ளது.

## அரசைத் தேர்தலை...

தேசியக் கூட்டணியில் உள்ள கட்சிகளோடு நான் இணைந்து அண்மையில் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தேன். மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக எந்த வகையான காரணமும் சொல்லி காலம் தாழ்த்தாமல் உடனடியாக வைக்க வேண்டும், இந்தக் கோரிக்கையை அனைத்து தமிழ் பேசுகின்ற மக்கள் மத்தியில் உள்ள கட்சிகளும் இலங்கையினுடைய அனைத்து கட்சிகளோடும் இணைந்தும் தனித்தனியாக முன் வைக்க வேண்டும் என்ற இணக்கத்தோடு இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது என்று என்று நான் நினைக்கிறேன்.

தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது இலங்கை மக்கள் அனைவருடைய கோரிக்கையாகத்தான் பார்க்கிறேன். நடத்தப்பட வேண்டிய தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் இருப்பது அரசியல் யாப்புக்கும் விரோதமானது.

ஜனநாயகத்தை விரோதமாக்கி அதிகாரத்தில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தியினர் காரணங்கள் எதையும் கூறாமல் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.

அரசியல் கட்சிகளுடைய தலைவர்களோடும் இலங்கையினுடைய பல்வேறு சமூகங்களின் உடைய அரசியல் சமூக பிரமுகர்களோடும் நான் நடத்தி வருகின்ற சந்திப்புகள் தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்பதல்ல. தேர்தல் இன்று வந்தால்தான் எப்படி ஒரு கட்சி தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்று பிரச்சினையே வரும். அந்த விடயங்களுக்குள் நான் எந்தவிதமான அக்கறையும் செலுத்துவதற்கு இல்லை. யாருக்கு வாக்களிப்பது என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். நடந்தால் யார் மாகாணத்தின் முதலமைச்சர் என்பது தெரியவரும்.

அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் மாகாண ஆட்சிக்கான தேர்தலை அரசை நடத்த வைப்பது, எப்படி நாங்கள் உறுதிப்படுத்துவது என்பது பற்றியதும், மாகாண ஆட்சிக்கான அதிகாரங்களை எப்படி முழுமையாக முறையாகவும் பெற்றுக்கொள்வது என்பது பற்றியதுமான கலந்துரையாடலாகவே அமைந்தது. அதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கு பற்றி இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதுவேதான் உரையாடலாக இருந்திருக்கும் .அது தொடர்பாக கட்சி எவ்வாறு அவற்றை முகம் கொடுக்கும் என்பது இப்போதைக்கு மிகப் பிரதானமான விடயம் அல்ல. அதற்கு முதலில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள அனைத்து கட்சிகளும் இலங்கையில் உள்ள அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் அரசை மாகாண சபைத் தேர்தலை நடத்த வைக்க வேண்டும்." - என்றார்.

# 13 ஐ முழுமையாக அமுல்படுத்தாதீர்கள்

## அது ஆபத்து என்று அரசை எச்சரிக்கின்றார் வீரசேகர



"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுமானால் இலங்கை சமஷ்டி நாடாக மாறி, வடக்கு சுயாதீன மாகாணமாக உதயமாகிவிடும்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால் இலங்கை பெடரல் (சமஷ்டி ராஜ்ஜமாகிவிடும். குறிப்பாக வடக்கு மாகாண சபை சுயாதீன சபையாக மாறும். அவர்களின் தேவைக்கேற்ப சட்டங்களை உருவாக்கிக்கொள்ளலாம்.

இவ்வாறானதொரு நிலைமைக்கே பிரபாகரன் முயற்சித்தார். அதற்காக 30 வருடங்கள் போரிட்டார். போர் மூலம் அடைய முடியாமல்போனதை வேறு வழியில் அடைவதற்குரிய முயற்சியாகவே இது உள்ளது. எனவே, 13 ஐ அமுலாக்கக் கோரும் யோசனை சுயாதீன நாடான இலங்கையின் இறைமைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகும்.

வெளியக பொறிமுறையில் உள்ள அச்சுறுத்தலை நாம் உணர வேண்டும். அது எமது படையினருக்கு ஆபத்தாக அமையும்." - என்றார்.



# தரம் 1, 6 மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் இல்லை

அடுத்த வருடத்திற்கு தரம் ஒன்று மற்றும் தரம் 06 மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் வழங்கப்பட மாட்டாது என கல்வி அமைச்சு தெரிவித்தது.

புதிய கல்வி சீர்திருத்தங்களின் பிரகாரம் இந்த மாணவர்களுக்கு செயன்முறை புத்தகங்கள் மற்றும் வழிகாட்டல் புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இவற்றை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த தரங்களுக்கான மாணவர்களின் புத்தகப்பைகளின் நிறை குறைவடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**கஜேந்திரகுமார்...**

ஜனநாயகக் கூட்டணியின் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுவிஸ்லாந்தில் இடம்பெற்ற சமஸ்டி தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்ட போது சுவிஸ் அரசு சமஷ்டித் தீர்வைத் தமிழ் மக்களுக்கு வழங்க இருப்பது போன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். ஆனால் உண்மை அதுவல்ல, அங்கே நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்களை சுவிஸ் அரசு அழைத்தது சமஷ்டி தொடர்பான ஒரு கற்பித்தத்தை வழங்குவதற்கு மாத்திரமே தவிர, வேறு வேறு எதற்கும் அல்ல.

அங்கு அதிகம் வந்தவர்கள் தேசிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. அரசை சேர்ந்தவர்கள். எனவே, அவர்கள் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் முன்வைக்கப்பட்ட யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விடயங்களை முன் கொண்டு செல்வதாகத் தெரிவித்தார்கள். ஆனால், அது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரையும் அவர்கள் முன்னெடுக்கவில்லை.எனவே, இதனை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அத்துடன் 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமலபடுத்தி எமக்கு கிடைக்கின்ற குறைந்தபட்ச அதிகாரமான மாகாண சபை தேர்தலை நடத்தி அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், நாங்கள் அதிலே போட்டியிடுவோம், தேர்தல் தொடர்பில் பேசப்பட வேண்டும் என்று கூறுகிற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் 13 ஆம் திருத்தச் சட்டம் தேவை இல்லை என கூறி வருகின்றனர். எனவே, இது தொடர்பில் அவர்களுக்கு சரியான கருத்துக்கள் இல்லை.

மேலும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அனைத்து விடயங்களும் சொல்லப்பட்டுள்ளன. அது தொடர்பான அவர்களது கருத்துருவாக்கத்தில் தான் ஏதோ தவறு உள்ளது." - என்றார்.

## யாழ். உதைபந்தாட்ட பிரிமியர் லீக்:

# இறுதிக்குள் நுழைந்தது நவஜீவன்ஸ் இரண்டாவது அரையிறுதி இன்று!

‘முரசு’ மின்னிதழ் குழுமத்தின் (A one media) ஏற்பாட்டில் நடக்கும் யாழ். உதைபந்தாட்ட பிரிமியர் லீக் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள இத் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. இதில் உடுப்பிட்டி நவஜீவன் அணி 3:2 என்ற கோல் கணக்கில் மணற்காடு அன்ரனிஸை வீழ்த்தி முதல் அணியாக இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.



இந்நிலையில் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இதில், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.



# நமது கருத்து

## கடன் வலை விரிப்பு

இணையம் அல்லது மொபைல் போன்கள் மூலம் கடன்களை வாரி வழங்குவது குறித்துத் தாராள விளம்பரங்கள் இப்போது வெளியாகி வருகின்றன. ஆனால், மறுபுறத்தில் அவை தொடர்பில் எக்கச்சக்கமான முறைப்பாடுகளும் பொதுமக்களிடமிருந்து கிடைத்து வருகின்றன என்று பொலிஸார் கூறுகின்றனர்.

ஏமாற்றும் கடன் நடைமுறைகள் தொடர்பான புகார்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, இணையம் அல்லது மொபைல் போன்கள் மூலம் கடன்களைப் பெறும்போது எச்சரிக்கையாக இருக்குமாறு குடிமக்களை வலியுறுத்தும் ஒரு பொது எச்சரிக்கையை இலங்கை பொலிஸ் துறைத் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

பொலிஸாரின் கருத்துப்படி, கணிசமான எண்ணிக்கையிலான நிறுவனங்கள் தற்போது இணையம் மற்றும் மொபைல் தளங்கள் மூலம் கடன்களை விளம்பரப்படுத்தி வருகின்றன. பெரும்பாலும் இந்தச் சலுகைகளை அவை கவர்ச்சிகரமான முறையில் வழங்குகின்றன.

சில சந்தர்ப்பங்களில், எந்தவொரு பிணைத் தேவைகளும் இல்லாமல் கூட உடனடிக் கடன்கள் கிடைப்பதை ஊக்குவிப்பதற்கு அநாவசியத் தொலைபேசி அழைப்புகளும் பயன்படுத்தப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

வட்டி விகிதங்கள் மற்றும் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகள் குறித்து உரிய கவனம் செலுத்தாமல், இத்தகைய கடன்களைப் பெற்ற பிறகு பல தனிநபர்கள், அதன் பின்னர் கடுமையான நிதி சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்பது இலங்கை பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகள் மூலம் ஊர்ஜிதமாகியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

பல சந்தர்ப்பங்களில், கடன் வாங்குபவர்கள் எதிர்பாராத விதமாக மிக அதிக வட்டி விகிதங்களைச் செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர் என்பது தெரியவந்திருப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இந்த நிறுவனங்கள் கடன் வாங்குபவர்கள் உரிய நாள்களில் மீள் செலுத்துகையைச் செய்யத் தவறும் போது அவர்களை முறையற்ற வகையில் துன்புறுத்தும் விதத்தில் திரும்பத் திரும்ப அழைப்பை எடுப்பது மற்றும் பணம் செலுத்துவதில் பின்தங்கியவர்களை அவமானப்படுத்தும் வகையில் சமூக ஊடகத் தளங்களில் அவதூறான உள்ளடக்கத்தை வெளியிடுவது போன்ற நெறிமுறையற்ற அறவீட்டு நடைமுறைகளில் ஈடுபட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

இத்தகைய முறைப்பாடுகள் குறித்து, இலங்கை பொலிஸ் துறை, இலங்கை மத்திய வங்கியின் வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் துறையுடன் கூட்டு விசாரணையை நடத்தியிருக்கின்றது. டிஜிட்டல் தளங்கள் மூலம் கடன்களை வழங்கும் பல நிறுவனங்கள் மத்திய வங்கியால் கட்டுப்படுத்தப்படவில்லை என்பது அப்போது கண்டுபிடிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. இப்போது அத்தகைய நிறுவனங்களை முறையான ஒழுங்குமுறை மேற்பார்வையின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, சாத்தியமான சுரண்டல் மற்றும் நிதித் தீங்கைத் தவிர்க்க, இலங்கை மத்திய வங்கியால் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மட்டுமே நிதிச் சேவைகளைப் பெறுமாறு இலங்கைப் பொலிஸ் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

மேலும் தகவலுக்கும் அல்லது ஏதேனும் சந்தேகத்திற்கிடமான நிதி நடவடிக்கைகள் குறித்து முறைப்பாடு செய்யவும், பொதுமக்கள் தங்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தைத் தொடர்பு கொள்ள அல்லது மத்திய வங்கியின் அதிகாரப்பூர்வ வலைத் தளத்தைப் பார்க்க பரிந்துரைக்கப்படுகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசரத்துக்கு கடன் பெறத் துடிப்பவர்களை இலக்கு வைத்தே இத்தகைய நிறுவனங்கள் வலை விரிக்கின்றன. அவை குறித்து மக்கள் நேரத்துடனேயே எச்சரிக்கையுடன் இருப்பது எப்போதும் நல்லது.



# திருக்கேதீஸ்வரத்தில் உற்சவகால வளைவு உடைப்பு; வழக்கு விசாரணை ஆரம்பித்த பின்னர் ஒத்திவைப்பு

**(ந.லோகதயாளன்)**

திருக்கேதீஸ்வர உற்சவகால வளைவு உடைப்பு தொடர்பாக 10 பேருக்கு எதிராக 6 வருடங்களின் பின்பு நேற்று முதன் முதலாக குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை ஆரம்பித்தது.

2019 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வர ஆலய உற்வத்திற்காக அமைக்கப்பட்ட தற்காலிக வளைவு உடைத்தமை தொடர்பான வழக்கு மன்னார் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் றிஸ்வி முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் ஆரம்பத்தில் சொத்துகளுக்கு நாசம் விளைவித்த குற்றச்சாட்டு மாத்திரமே பொலிஸ் தரப்பினால் எதிராளிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தது. ஆயினும் பாதிக்கப்பட்ட தரப்பின் ஆட்சேபனையின் பேரில் உணர்வு பூர்வமான சமய உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தியமை, சட்டவிரோதமாக கூடியமை போன்ற குற்றச்சாட்டுகளும் 10 எதிராளிகளுக்கும் எதிராகச் சுமத்தப்பட்டது. எதிராளிகளில் ஒருவர் மரணித்து விட்டார் என்று மன்றில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது, எதிராளிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி றின்ஸி அரசகுலரட்ன இது தொடர்பில் வேறு வழக்குகள் குற்றம் சுமத்திய தரப்புக்கு எதிராக இருப்பதாக குறிப்பிட்டு அது பற்றி விவாதிக்க முற்பட்டார்.

ஆனால், பாதிக்கப்பட்ட தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், அந்த வழக்குகள் எல்லாம் முடிவடைந்து தீர்க்கப்பட்டு விட்டன, இப்போது நேரடியாக இந்த வழக்கைத் தொடங்கலாம் என்று முன்வைத்த வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அதனை அடுத்து வழக்கு விசாரணை ஆரம்பித்தது.

ஒன்பது எதிராளிகளும் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கான கூண்டில் நிறுத்தப்பட்டனர்.

வழக்கின் முதலாவது சாட்சி சாட்சியம் அளித்த வேளையில், குற்றவாளிக் கூண்டில் நிற்பவர்களுக்கு மேலும் அதிகமானவர்கள் இந்த வளைவு உடைப்பு சம்பவத்தில் ஈடுபட்டனர் என்றும், அவர்கள் பற்றிய விவரங்கள், படங்கள், வீடியோ ஆதாரங்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட போதிலும், அவர்களைப் பொலிஸார் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கவில்லை என்றும் சாட்சியத்தின் அடிப்படையில் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆகையினால் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட – உயிரோடு இருக்கின்ற – ஒன்பது பேருக்கு மேலதிகமாக வேறு ஆள்களும் சேர்ந்து இந்தக் குற்றங்களைச் செய்தார்கள் என்று குற்றப்பத்திரிகை திருத்தப்பட வேண்டும் என்று நீதிவான் சுட்டிக் காட்டினார்.

அத்தகைய விதத்தில் குற்றப்பத்திரத்தை திருத்துவதற்கு உத்தரவிட்ட நீதிவான் வழக்கு விசாரணையை மேலதிக விளக்கத்திற்காக அடுத்த ஆண்டு ஜனவரி 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் இந்தத் தீபாவளிக்கு ஏமாற்றப்பட்டுள்ளனர்

## வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு



மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் இந்த முறை தீபாவளிக்கு ஏமாற்றப்பட்டுள்ளனர் என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் குறித்து ஜனாதிபதி கூறியது போல, பண்டிகை காலத்தில் தொழிலாளர்களுக்கு நற்செய்தி ஒன்று கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் நாங்கள் காத்திருந்தோம். ஆனால் அந்த எதிர்பார்ப்பு தற்போது தோல்வியடைந்துள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் குறித்து முதலாளிமார் சம்மேளனத்தின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி ஏலவே பேச்சுவார்த்தை நடத்தியிருந்த நிலையில், இன்று நடைபெற்ற சம்பள நிர்ணய சபை கலந்துரையாடலில் முதலாளிமார் சம்மேளனம் கலந்து கொள்ளாதமை, அரசாங்கத்தின் அழைப்பை உதாசீனம் செய்துள்ளதாக கருதப்படுகின்றது.


இவ்விடயம் பெருந்தோட்ட தொழிலாளர்களில் சம்பள விடயத்தில் பெரும் தோல்வியை எடுத்துக் காட்டுகிறது.

மேலும், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,750 ரூபா நாளாந்த சம்பளம் தருவதாக அரசாங்கம் உறுதிமொழியளித்தை நாங்கள் இதுவரை நம்பியிருக்கின்றோம். வருட இறுதிக்குள் ஜனாதிபதி கூறியது போல பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான குறித்த சம்பளத்தை பெற்று தருவார் என நம்புகிறோம்.” – என்றார்.





# அரசாங்கத்தின் பாலஸ்தீன ஆதரவு நிலையும் தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான மனநிலையும்!



அருணாசலம்
சபேஷ்குமார்



நாடு இன்னுமொரு தேர்தலை நோக்கி நகர்கிறது. ஒவ்வொரு கட்சியும் தேர்தலை நோக்கி தீவிரமாகச் செயற்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா பொது ஜன பெரமுன என்பன மாகாணசபையில் தமது ஆதிக்கத்தை தக்க வைக்க முயல்கின்றன. அதற்கான பேரம் பேசல்களும் கட்சி மட்டங்களில் நடக்கின்றன. ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தமது இருப்பை தக்க வைக்க ஊழல் மோசடி விசாரணை, போதைப் பொருள் மாபியாக்களின் விசாரணை உள்ளிட்ட பல்வேறு நீதிமன்ற வழக்குகளைத் தூசி தட்டி தனது இருப்பை நீடிக்க முயல்கிறது. புதிய அரசமைப்பு விடயங்கள் கூட பேசுபொருளாக மாறியுள்ளன. இருப்பினும் தென்னிலங்கை கட்சிகள் தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான மனநிலையிலேயே அவர்கள் தொடர்ந்தும் பயணிக்கின்றனர் எனத் தெரிகிறது.

உரிமைக்காக போராடும் தமிழ் தேசிய இனத்தின் தாயகப் பகுதிகளிலும் உரிமை அரசியலை தேர்தல் அரசியலாக மாற்றி அதற்கான நகர்வுகள் இடம்பெறுகின்றன. வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் தமிழ் தேசிய கட்சிகள் தேர்தலுக்காக மக்கள் பிரச்சினைகளைக் கையில் எடுத்து தமது அரசியல் இருப்புக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன. தமிழ் தேசிய கட்சிகளின் ஒற்றுமை குறித்தும் பேச்சுகள் நீள்கின்றன. இவை அனைத்தும் தேர்தல் அரசியலை இலக்கு வைத்து நடப்பவை. முள்ளிவாய்கால் பேரவலத்திற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் தடம் மாறி வெறும் தேர்தலுக்கான அரசியலாக வந்து நிற்கின்றது. இந்த நீடிப்பு ஆரோக்கியமானதல்ல. தமிழ் தேசிய மக்கள் முன்னணி தீவிர தமிழ் தேசியத்தை முன்னெடுப்பதாக காட்டுகின்ற போதும் யாழ்ப்பாணத்திற்கு வெளியில் பெரியளவில் மக்கள் திரட்சியை ஏற்படுத்தவில்லை.

தமிழ் தேசிய இனத்தின் உரிமைக் கோரிக்கையானது இன்று முன்வைக்கப்பட்டதல்ல. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே முன்வைக்கப்பட்டு வந்த விடயம். ஜனநாயக ரீதியாக தமிழ் தேசிய இனம் தமது உரிமையைக் கேட்டபோது தென்னிலங்கையின் ஆளும் வர்க்கம் அதனைக் கண்டு கொள்ளவில்லை. இதன் விளைவாக தமிழ் இளைஞர், யுவதிகள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அந்த உரிமைப் போராட்டம் சர்வதேசத்தின் கூட்டுடன் 2009ஆம் ஆண்டு முள்ளியவாய்கால் பேரவலத்துடன் முடிவுக்கு வந்தது. அதன்பின் தமிழ் தேசிய அரசியலை மீண்டும் ஜனநாயக வழியிலேயே முன்னெடுக்க வேண்டி ஏற்பட்டது. அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் முன்னாள் தலைவர் இரா. சம்பந்தனும் சரியாக முன்னெடுத்தாரா என்ற கேள்வி இன்று பரவலாக எழுந்துள்ளது. புலி நீக்க அரசியல், தமிழ் தேசியம் நீக்கம் என்பவற்றை கூட்டமைப்பு குறிப்பாக தமிழரசுக்கட்சி செய்து வந்துள்ளது. இது தென்னிலங்கைக்கு கிடைத்த ஒரு வெற்றியும் கூட. இப்பொழுது தமிழ் தேசியம் ஆபத்தான கட்டத்தில் வந்து நிற்கின்றது. அதனை முன்னெடுத்து தமிழ் தேசிய இனத்தின் அபிலாசைகளைப் பெற்றுக் கொடுப்பது யார் என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

மறுபுறம், ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இம்முறை கொண்டுவரப்பட்ட தீர்மானமும் பலவீனமாக உள்ளதாக தமிழ் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இருப்பினும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் “இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்“ தொடர்பான தீர்மானம் ஒன்று வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தப் புதிய தீர்மானம் மூலம் சர்வதேச மேற்பார்வை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நீடிக்கப்பட்டுள்ள இரண்டு வருடங்களையும் தமிழர் தரப்பு சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஐ.நா. பொதுச் சபையின் 80 ஆவது கூட்டத் தொடரில் ஓர் இறையாண்மை கொண்ட தனி நாடாக பாலஸ்தீனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஐ.நாவில் அங்கத்துவம் வகிக்கும் 193 ஐ.நா. உறுப்பு நாடுகளில் 157 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. பொதுச் சபையில் இதன்மூலம் 194 நாடுகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவும் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு ஆதரவை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா ஐ.நா. பொதுச் சபையின் 80 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றும் போது, “பாலஸ்தீன மக்களுக்கான தனி அரசுக்கான பிரிக்க முடியாத உரிமையை நாங்கள் அங்கீகரிக்கி

தொடர்ச்சி▼

# அரசாங்கத்தின் பாலஸ்தீன ஆதரவு நிலையும் தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான மனநிலையும்!

தொடர்ச்சி▲

றோம். இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன மக்களின் நியாயமான பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான தேவைகளை அங்கீகரிப்பதும் அவசியம். 1967 ஆம் ஆண்டின் எல்லை வரையறையை கொண்டு, இரண்டு நாடுகள் அருகருகே இருப்பதற்கான அடிப்படையை வழங்கிய ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின் படி ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வுக்காக நாம் ஒன்றுபட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இவ்வாறு கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமாரவின் தரப்பு முன்னர் போராட்ட இயக்கமாக ஜே.வி.பி. என்ற பெயருடன் இருந்து, தென்னிலங்கை ஆளும் வர்க்கத்தால் அவரும் அவரது இயக்கமும் அடக்கி ஒடுக்கப்பட்டு முதன் முறையாக தேசிய மக்கள் சக்தி என்ற பெயருடன் தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சி பீடமேறியுள்ளார். போராட்ட வரலாறு மற்றும் அடக்குமுறைகள் குறித்து அவருக்கும் அவரது அரசாங்கத்திற்கும் தெரியும். அதனாலேயே மறைக்கப்பட்டிருந்த பட்டலந்த வதை முகாம் கூட பேசுபொருளானது. அவ்வாறு இருக்கையில் பாலத்தீனத்திற்கு கருணை காட்டும் ஜனாதிபதியும் அரசாங்கமும் சொந்த நாட்டில் அகதிகளாகவும், உரிமையற்றவாகளாகவும் நின்று போராடும் ஒரு தமிழ் தேசிய இனம்

எப்போதும் மாற்றங்களைச் செய்ய மாட்டோம். கடந்த காலங்களில் இலங்கையின் நீதித்துறையினுடைய சுயாதீனம் தொடர்பில் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் சந்தேகங்கள் இருந்தன. ஆனால், தற்போது நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில், நீதித்துறையின் சுயாதீனம் எவ்வளவு தூரம் மேம்பட்டுள்ளது என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளோம். ஆதலால், இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்குச் சர்வதேசம் தேவையில்லை என்பதே எமது நிலைப்பாடு" என அமைச்சர் நளிந்த குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் நளிந்த கூறுவது போல் உள்நாட்டு பொறிமுறை மூலம் தமிழ் மக்களுக்கு நியாமான தீர்வை தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகள் பூர்த்தியாகும் வகையில் வழங்க முடியுமா என்ற கேள்வி எழுவது இயல்பானது.

தற்போதைய அரசாங்கம் ஆடசி பீடம் ஏறி ஒரு வருடங்கள் பூர்தியாகியுள்ள நிலையில் தமிழ் மக்களுக்கு கிடைத்த நன்மைகள் என்ன? அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்ந்தும் கிடப்பில் உள்ளது. ஆக, தமிழ் மக்கள் குறித்து அரசாங்கம் கரிசனை காட்ட தவறி வருவதுடன், தொடர்ந்தும் தென்னிலங்கையை திருப்திப்படுத்த முயல்கிறது.



குறித்து கரிசனை காட்ட தயங்குகிறார்கள்.

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களும் அரசியல் இருப்புக்காகவே கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அவ்வாறான செயற்பாடுகளில் நாங்கள் ஒருபோதும் ஈடுபடப்போவதில்லை. அதுபோல், அத்தகைய செயற்பாடுகள் ஈடுபடுவதற்கு எவரையும் அனுமதிக்கவும் மாட்டோம்." – என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்தி விட்டார்.

"ஜெனிவா தீர்மானத்துடன் நாங்கள் உடன்படவில்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிலைப்பாட்டில் நாங்கள்

காஸாவை மிஞ்சியதாக முள்ளிவாய்காலில் இடம்பெற்ற பேரவலம் ஏன் இந்த அரசாங்கத்தின் கண்ணுக்கு புலப்படவில்லை? சர்வதேச ரீதியில் பாலஸ்தீன விடுதலையில் தலையிட்டு தம்மை நல்லவர்களாக காட்ட முயலும் அநுர அரசாங்கம் சொந்த நாட்டில் வாழும் தமிழ் தேசிய இனத்தின் அரசியல அபிலாசைகளை வழங்குவதிலும் கவனம் செலுத்த வேண்டும். அதுவே பல்லின கலாசாரம் கொண்ட இலங்கை தீவை ஒரு நாட்டு மக்களாக அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து ஒருவர் தோளில் ஒருவர் கைபோட்டு அரசியல், பொருளாதார, அபிவிருத்தி ரீதியாக கட்டியெழுப்ப உதவும்.



# 4 லட்சத்தை எட்டிய தங்கத்தின் விலை

உள்நாட்டு சந்தையில் தங்கத்தின் விலை முதல் தடவையாக 04 லட்சம் ரூபாவை கடந்துள்ளது.

24 கரட் தங்கம் ஒரு பவுன் 410,000 ரூபாவாக அமைந்துள்ளது.

நேற்று முன்தினம் விலையுடன் ஒப்பிடுகையில் தங்கத்தின் விலை 15,000 ரூபாவால் அதிகரித்துள்ளது.

22 கரட் தங்கம் ஒரு பவுன் நேற்று 3,79200 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

உலக சந்தையில் தங்கம் ஒரு அவுன்சின் விலை 4,373 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் முதல் தங்கத்தின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வந்தது.

வருடத்தின் ஆரம்பத்தில் தங்கம் ஒரு அவுன்ஸ் 2,640 அமெரிக்க டொலராக பதிவாகியிருந்தது.

அமெரிக்காவில் தற்போது நிலவும் அரசு முடக்கம் மற்றும் அமெரிக்க டொலரின் வீழ்ச்சி உள்ளிட்ட காரணிகளால் தங்கத்தின் விலை அதிகரித்து வருவதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

டொலரின் வீழ்ச்சியால் மக்கள் டொலரை கைவிட்டு அதிகளவில் தங்கத்தில் முதலீடு செய்வதாகவும் பெறுமதியான உலோகங்கள் பகுப்பாய்வு பணியகத்தின் உதவி பணிப்பாளர் இந்திக பண்டார குறிப்பிட்டார்.

அமெரிக்க வங்கியின் வட்டி வீதம் குறைவடைந்துள்ளதால் நிலையான வைப்புகளிலுள்ள பணத்தை மக்கள் தங்கத்தில் முதலீடு செய்வதாலும் தங்கத்தின் விலை அதிகரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

2025 ஆம் ஆண்டில் 50 வீதத்தால் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது.

உலகின் பல நாடுகள் மீது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முன்னெடுத்த வர்த்தக வரியை தொடர்ந்தே கடந்த ஏப்ரல் மாதம் முதல் தங்கத்தின் விலை அதிகரித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் லொக்கு பெட்டியின் உதவியாளர் கைது

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் லொக்கு பெட்டியின் உதவியாளரான எஸ்.எப். இந்திக எனும் நபர் ஹுங்கம பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் சொத்துக்கள் விசாரணை பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து ரி 56 துப்பாக்கி, 60 துப்பாக்கி ரவைகள், 02 மெகஸின்கள் ஆகியனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்த தோட்டாக்களின் இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.



# மந்திரமனை சேதமடைவதினின்றும் பாதுகாப்பதற்கான பணிகள் ஆரம்பம்

இலங்கையின் யாழ்ப்பாண அரசு கால மரபுரிமைச் சின்னமான – யாழ் நல்லூரில் அமைந்துள்ள – மந்திரிமனையைப் பாதுகாப்பதற்கான பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

கடந்த மாதம் இந்த மந்திரிமனை மழை காரணமாக பகுதியளவில் இடிந்து வீழ்ந்திருந்தது.

இதன் பாதுகாப்புக் கருதி மந்திரி மனையின் சேதமடைந்த வாயிற் புற கூரை கழற்றி மழைக்கால சேதத்தினை தடுப்பதற்கான வேலைகைகள் நடைபெற்று வருகின்றன

தொல்பொருள் திணைக்களம், காணி உரிமையாளர்கள் இணைந்து இச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

முன்னாள் ஆணையாளர் என்ற வகையிலும் நெருங்கிய அயலவர் என்ற முறையிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இப்பணியில் இணைந்து செயற்படுகின்றார்.













# நெவில் வன்னிஆரச்சிக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னிஆரச்சியை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

28 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமாக ஈட்டி யுள்ளதாக தெரிவித்து லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் அவர் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

சிறைச்சாலை அதிகாரிகளால் சந்தேகநபரான நெவில் வன்னிஆரச்சி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த பிரதம நீதவான் சந்தேகநபரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



# இஷாரா செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மூவர் கைது

இஷாரா செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட் டின் கீழ், ஒரு பொலிஸ் கான்ஸ் டபிள் உட்பட மூவர் கைது செய்யப்பட் டுள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள், கான்ஸ் டபிளின் மனைவியின் தாய் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழு வைச் சேர்ந்தவரென கருதப்படும் மாத்தறை ஷான் என்பவரின் நெருங் கிய சகா ஒருவரும் கைது செய்யப்பட் டுள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் ஏனைய இருவர், இஷாரா செவ் வந்திக்கு அடைக்கலம் கொடுத்து உதவி னர் என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தெரிவித்துள்ளது.



# அனலை அன்னை உற்பத்தி நிலையத்தின் கட்டட திறப்பு விழா நேற்று அனலைதீவில் நடைபெற்றது

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பங்கேற்பு

அனலைதீவு வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு உற்பத்தி பொருள்களை உற்பத்தி செய்வதற்காக அமைக்கப்பட்ட அனலை அன்னை உற்பத்தி நிலையத்தின் கட்டடத் திறப்பு விழா நேற்று அனலைதீவில் நடைபெற்றது.

தீவகப்பகுதிகளின் வாழ்வாதாரத்திற்கு இன்னல் படும் மக்களிற்கு இக்கட்டடம் பெரிதும் உதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற மன்ற உறுபபினர் சிவஞானம் சிறிதரனின் குறித்தொதுக்கப்பட்ட 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் அன்னலிங்கம் அன்னராசா, ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் வனஜா செல்வரட்ணம், ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அனலைதீவு வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.














# ‘தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்’ நூல் அறிமுக நிகழ்வு இன்று யாழ் நகரத்தில்






பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய “தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்“ நூல் அறிமுக நிகழ்வு யாழ்நகர் தந்தை செல்வா கலையரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறவிருக்கிறது.

இந்த நிகழ்வில் கலாநிதி சிவகுமார் சுப்பிரமணியம் (பொறியியலாளர்), உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ், மூத்த பத்திரிகையாளர் அனந்த் பாலகிட்ணர், சமூக, அரசியல் செயற்பாட்டாளரும் அரசியல் ஆய்வாளருமான கருணாகரன் சிவராஜா ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

# 40 ஊர்தி பவனிகளுடன் இடம்பெறவுள்ள புதுக்குடியிருப்பு பண்பாட்டு பெருவிழா இன்று!

## விழாவை சிறப்பிக்க அனைவரையும் அழைத்து நிற்கின்றது மேம்பாட்டு பேரவை

(பா.சதீசன் )

புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் பண்பாட்டு பெருவிழா இன்று சனிக்கிழமை (18) மிகவும் பிரமாண்டமாக 40 ஊர்திகளுடன் பவனி வந்து பல கலை, பண்பாடுகளுடன் நிகழ்வுகள் சிறப்பிக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு தொடர்பில் நேற்று (17) ஊடகங்களுக்கு புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையின் தலைவரும், ஓய்வு நிலை பிரதிகல்விப்பணிப்பாளருமான பொன்.பேரின்பநாயகம் கருத்துத் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவையானது பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில், கலை, பண்பாடு தொடர்பாகவும், பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

வருடாவருடம் மேம்பாட்டு பேரவையானது கலைபண்பாட்டு விழா நடாத்த வேண்டும் என்ற அடிப்படையில் கடந்த வருடமும் கலைபண்பாட்டு விழாவை நடத்தியிருந்தோம். இவ்வருடம் புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையானது புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து கலைபண்பாட்டு விழாவை நடத்துகின்றது.

அந்தவகையில் முன் நிகழ்வாக காத்தவராயன் கூத்து, பாடசாலை பிள்ளைகளுக்கான கிராமிய ஆக்கம், நடனம் போன்ற போட்டிகளை நடாத்தி இருக்கின்றோம். அதில் முதலிடங்களை பெற்றவர்களுக்கு கலைபண்பாட்டு விழாவில் பரிசில்கள் வழங்கப்படுவதோடு அவர்களது நிகழ்வுகள் மேடையேற்றப்படவுள்ளன.

இந்தக் கலை விழாவில் 40 ஊர்திகள் பங்குபெறவுள்ளன. இதில் கோலாட்டம், கும்மி , கரகம், குடம் போன்ற கலைகள் காண்பிக்கப்படவுள்ளன.

அரங்க நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. கலைகள் அருகிவரும் நிலையில் இளைஞர்கள் முதியவர்கள் என்று அனைவரும் பங்குகொண்டு விழாவை சிறப்பிப்பதோடு எதிர்காலத்தில் கலை பண்பாடு வளர ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.– என்றார்.





குறித்த பண்பாட்டு விழா தொடர்பில் புதுக்குடியிருப்பு பண்பாட்டு பேரவையின் ஆலோசகரும், ஓய்வு நிலை பிரதிகல்விப்பணிப்பாளருமான ச.நாகரட்ணம் கருத்து தெரிவிக்கையில்,

மனித வாழ்விலே பண்பாடு, விழுமியம், கலாச்சாரம் வாழ்வியல் என்பன மிக முக்கியமான கருதுகோளாக இருக்கின்றன. புராதன காலத்தில் இருந்து இன்றுவரை மனித, வாழ்வு, உணர்வு, பண்பாடுகளிலே பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டுவந்தாலும் பழையகால நம்பிக்கைகள் கடைப்பிடித்து வருவதை அவதனிக்க முடிகின்றது.

வேட்டையாடி இறைச்சிகளை உண்டு காடுகளிலே வாழ்ந்த மக்கள் படிப்படியான நாகரிக வளர்ச்சியில் முன்னேற்றமடைந்து இன்று தொழில் முறையியல் வளர்ச்சி காரணமாக செவ்வாய் கிரகத்திலே வாழ தகுந்தவர்களாக ஆக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வேளையில் கூட எமது புராதன பண்பாடு கலாச்சாரம் விழுமியங்கள் இன்றும் மக்கள் மத்தியில் பின்பற்றப்பட்டு வருகிறது.

உலக ஒழுங்கு, நாகரீக வளர்ச்சியிலும் மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து இன்றுவரை அவனது வாழ்வாதாரங்களோடு தொழில் முறையியலோடு இந்த பண்பாட்டு விழுமியங்களும் பேணப்பட்டு வருகின்றன. விவசாயத்தையோ, தோட்ட வேலைகளையோ, வேட்டையாடலையோ, கால்நடை வளர்ப்பையோ செய்துவந்த மக்கள் தமது தொழில்கள் முடிவுற்ற இடைக் காலங்களில் அந்தக் கிராம மக்கள் சமூகமாக ஒன்று சேர்ந்து பல்வேறுபட்ட நாடகங்கள் , கூத்துக்கள், விளையாட்டுக்கள் இன்னும் பல்வேறுபட்ட இசை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டதை நம் வரலாறு எமக்கு சொல்லித் தந்திருக்கின்றது.

எனவே இந்த அடிப்படைக் கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் பிரதேச செயலகங்கள் தோறும் வருடாவருடம் கலை பண்பாட்டு பெருவிழாக்கள் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் புதுக்குடியிருப்பிலும் இவ்வருடம் புதிய பிரதேச செயலாளர் வருகையோடு புதிய கலாசார உத்தியாகத்தர் அனுசரணையோடு புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையினரும் இணைந்து இந்த வேலைதிட்டங்களில் பங்கெடுத்து வருகின்றோம்.

இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் நல்லவர்களாக, பண்பாடுள்ளவர்களாக, காலாசாரத்தையும் விழுமியத்தையும், பேணிப் பாதுகாக்கக் கூடியவர்களாகத் தற்காலத்தில் சவாலாக இருக்கும் எதிர்வினை பொருள்களுக்கு அடிபணியாது ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குவதற்கு நாம் இந்த வேலைத் திட்டங்களைச் செய்து வருகின்றோம்.– என்றார்.




# கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் இடையில் கூட்டத்தை நிறுத்தி வெளியேறினார்

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் சின்னராசா லோகேஸ்வரனின் செயற்பாடுகள் தொடர்பில் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை அமர்வில் ஏற்பட்ட காரசாரமான வாக்குவாதத்தையடுத்து, சபை ஒத்திவைக்கப்பட்டு பின்னர் நிறைவு செய்யப்பட்டிருந்தது.

இது குறித்து நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன் –

“உபதவிசாளரின் அதிகாரம் என்ன என்பது தெரியாத ஒருவரைத் தவிசாளராக நியமித்தமை கட்சியின் மிகப் பெரிய தவறாகும். இதனை நினைத்து வெட்கி தலை குனியும் நிலையில் உள்ளேன்” என்றார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

சபையில் பிரேரணையை முன் வைக்கும் போது தவிசாளர் எதுவும் கூறாமல் சபையை விட்டு வெளியேறியிருப்பது அநாகரிகமான செயற்பாடு. அவ்வாறு செல்லும் முன் உப தவிசாளரிடம் பொறுப்பை ஒப்படைத்து சென்றிருக்க வேண்டும். ஆனால் அவர் எந்த அதிகாரத்தையும் உப தவிசாளருக்கு வழங்காமல் அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்திருக்கிறார். இது தலைமை பண்பின்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

அத்துடன் ஊடகவியலாளரை செய்தி சேகரிப்பதற்காக உள்ளே அனுமதிக்க பல்வேறு கட்டளைகளை பிறப்பித்து வருகின்றார். ஊடகவியலாளர் என்பதற்கு அடையாளமாயின் அது ஊடக அடையாள அட்டையே. அவ்வாறு ஊடக அடையாள அட்டை வைத்திருப்பின் அவர்களே ஊடகவியலாளர்கள். தவிசாளர் ஊடகங்களை உள்ளே அனுமதிப்பதற்கு அச்சப்படுவதால் மட்டுமே இத்தகைய கட்டளைகளை பிறப்பிக்கின்றார். கரைதுறைப்பற்று பிரதேச சபை தற்போது தவிசாளரின் தன்னிச்சை முடிவுகளின் கீழ் இயங்கிவருகிறது. – எனக் குறிப்பிட்டார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தற்போதைய செயற்பாடுகள் குறித்து உறுப்பினர்களும் , சமூக ஆர்வலர்கள் பலரும் தங்களது அதிருப்திகளை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.











# இலவச சுகாதார சேவையை வலுப்படுத்துவோம் என்றனர் இப்போது அதுவும் வலுவிழந்து வருகிறது என்கிறார் சஜித்

ஒரு நாட்டு மக்களின் அடிப்படை மற்றும் மனித உரிமைகளாக சுகாதாரத்தையும் கல்வியையும் கருதலாம். இந்த மனித மற்றும் அடிப்படை உரிமைகளை வெறும் பேச்சுக்களோடு மாத்திரம் சுருக்கிக் கொள்ளாது, செயல்பாடுகள் மூலமாகவும் பாதுகாக்க வேண்டும். நமது நாட்டின் இலவச சுகாதார சேவையில் தற்போது உபகரணங்கள், வைத்தியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றன. அவ்வாறே, வைத்தியசாலைகளுக்குத் தேவையான நவீன உபகரணங்கள் இல்லாமையினால் மக்களின் உயிருக்கு ஆபத்தும் காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ரூ. 31 லட்சம் மதிப்புள்ள இரத்த மாற்று இயந்திரமொன்றையும், (Dialysis Machine), 6.5 லட்சம் ரூபா மதிப்புள்ள RO plant இயந்திரமொன்றையும், மொத்தமாக 39 இலட்சம் மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை அநுராதபுரம், கெபிதிகொல்லாவ தள வைத்தியசாலைக்கு நேற்று தினம் நன்கொடையாக வழங்கி வைத்ததன் பிற்பாடு கெபிதிகொல்லாவ நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் அநுராதபுரம், கெபிதிகொல்லாவ பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராயும் நோக்கில், கெபிதிகொல்லாவ சந்தைத் தொகுதி வளாகத்தில், கிராமத்துக்கு கிராமமாக, வீட்டுக்கு வீடாக எதிர்க்கட்சித் தலைவரின் நடமாடும் சேவை இடம்பெற்றது. அச்சமயம், விடுக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும் முகமாகவே நேற்று தினம் இவ்வாறு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இரத்த மாற்று இயந்திரங்களுக்கு கூட தட்டுப்பாடு காணப்படுகின்றன. இதன் காரணமாக, நோயாளிகள் தனியார் துறை மூலம் பணம் செலுத்தி இந்த சேவைகளைப் பெற்றுக் கொள்வதும் நடந்துள்ளது. இலவச சுகாதாரம் என்பது பணம் செலுத்தி சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றல்ல. இது நலன்புரி அரசின் ஒரு முக்கிய அங்கமாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த வளப் பற்றாக்குறையால், சுகாதார சேவை கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன. சில வைத்தியசாலைகளில் அடிப்படை உபகரணங்கள் இல்லாமையால், பணம் செலுத்தி சில சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. இருப்பதை விட சிறந்த மட்டத்தில் சுகாதார சேவையை வலுப்படுத்துவோம் எனக் கூறிய தற்போதைய அரசாங்கம், இன்று இலவச சுகாதாரத்துறையை பலவீனப்படுத்தியுள்ளது. சிறுநீரக நோயாளிகளுக்குத் தேவையானடயாலிசிஸ்சேவைகளுக்கான உபகரணங்களை கடையிலிருந்து கொண்டு வர வேண்டி உள்ளது. இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் செய்யவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.











# திருமலை நீதிமன்றத்தில் சட்டத்தரணிக்கு அச்சுறுத்தல் விடுத்த வழக்கு ஒத்திவைப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை நீதிவான் நீதி மன்றத்தில் வைத்து கடந்த 14 ஆம் திகதி சட்டத்தரணி ஒருவருக்கு, வழக்காளியின் மைத்துனரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் வழக்கில், எதிராளிக்கு நேற்று நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியது.

திருகோணமலையைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கொன்றில் எதிர்த்தரப்பின் சார்பில் சென்ற 14 ஆம் திகதி மன்றில் முன்னிலையானார். அவ்வழக்கு பிறிதொரு தினத்திற்கு தவணையிடப்பட்டது. அத்தருணம் இவ்வழக்கை இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்க்க சட்டத்தரணி உதவி செய்யாவிட்டால் அவருக்கு தாம் பிரச்சினை ஏற்படுத்துவேன் என வழக்காளியின் மைத்துனர் நீதிமன்றத்திற்குள்ளேயே வைத்து சட்டத்தரணியை அச்சுறுத்தி உள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதனை அடுத்த அன்றைய தினமே அச்சுறுத்தப்பட்ட வழக்கறிஞர் இதுபற்றி திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார். சட்டத்தரணியின் முறைப்பாட்டை அடுத்து அச்சுறுத்தல் விடுத்தவருக்கு எதிராக துறைமுக பொலிஸார். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். இவ்வழக்கு நேற்று மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆரம்ப விசாரணையின் பின்னர் எதிராளிக்கு பிணை வழங்கப்பட்டு வழக்கு இம்மாதம் 29ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது.

இவ்வழக்கின் போது பாதிக்கப்பட்ட சட்டத்தரணியின் சார்பில் திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும், ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.எம்.சத்தார் தலைமையில் முன்னிலையாகி இருந்தனர். எதிராளி தரப்பில் கந்தளாய் சட்டத்தரணிகள் இருவர் முன்னிலையாகினர்.

# நாவலப்பிட்டி தொழிலாளி ஒருவருக்கு 31 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நட்டஈடு!

## தொழில்சங்கப் பொதுச் செயலாளர் எஸ். முருகையா தெரிவிப்பு

(மஸ்கெலியா நிருபர்)

நாவலப்பிட்டி பகுதியை சேர்ந்த தொழிலாளி ஒருவருக்கு தோட்ட நிர்வாகம் வேலை வழங்க மறுத்ததால், அவருக்கு 31 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நட்ட ஈடு வழங்குமாறு தொழில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதாக அகில இலங்கை ஐக்கிய ஊழியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ். முருகையா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் –

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு (ஜனவசம) சொந்தமான நாவலப்பிட்டி கந்தலோயா தோட்டத்தில் 1999 முதல் காவல் வேலை செய்து வந்த கே. கோபாலகிருஸ்ணன் என்பவர் குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் 2021 நவம்பர் முதலாந் திகதி கைது செய்யப்பட்டு ஆறு மாதங்களின் பின்னர் பிணையில் விடுவிக்கபட்டிருந்தார். எனினும், ஆறு மாதங்களின்



பின்னர் வேலைக்குச் சென்ற அவருக்கு தோட்ட நிர்வாகம் வேலை வழங்க மறுத்திருந்தது.

இதை ஆட்சேபித்து 2022 இல் அகில இலங்கை ஐக்கிய ஊழியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ். முருகையாவினால் நாவலப்பிட்டி தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பல தடவைகள் விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இறுதியாக இது தொடர்பான விசாரணை நாவலப்பிட்டி தொழில் நீதிமன்ற நீதிவான் திருமதி வீ. டபுள்யூ. விஜயவர்தன முன்னிலையில் இடம்பெற்று 2025 ஒக்டோபர் 10 இல் தீர்ப்பு வழங்கப்பட்ட போது, கோபாலகிருஷ்ணனின் வேலை நிறுத்தம் உறுதி செய்யப்படவில்லை என்றும், அவர் 60 வயது வரை வேலை செய்யும் வாய்ப்பை இழந்துள்ளமையால் மாதாந்தம் 26,000 ரூபா வீதம் 10 வருட சம்பளமாக மொத்தம் 31 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# வென்னப்புவ விபத்தில் ஒருவர் பலி!



**(உடப்பு-க.மகாதேவன்)**

வென்னப்புவ புதிய வீதியில் கொரக காஸ் சந்தி பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் பாடசாலை மாண வர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத் திச் சென்றவர் உயிரிழந்தார். மோட் டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த இளம் பெண் மற்றும் வானின் சாரதி ஆகியோர் காயமடைந்து மாரவில ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் கொஸ் வத்தையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கிராம சேவகர் எனத் தெரியவந்துள்ளது.

இறந்தவரின் மகளே காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

விபத்திற்குள்ளான வானை வென் னப்புவ பொலிஸ் போக்குவரத்துப் பிரி வின் அதிகாரிகள் பொறுப்பேற்றுள்ள னர். மேலதிக விசாரணைகள் தொடர் கின்றன.

# மலையகத்தின் திடீர் அனர்த்தங்கள் தொடர்பாக தோட்ட நிர்வாகங்களுடன் கலந்துரையாடப்படும்

## மஸ்கெலியா பிரதேச சபைத் தலைவர் ஏ.கே.ராஜ்குமார் தெரிவிப்பு





**(மஸ்கெலியா நிருபர்)**

மலையகத்தில் – குறிப்பாக மஸ் கெலியா பிரதேச சபை நிர்வாகத்துக்கு உட்பட்ட தோட்டங்கள் மற்றும் நகரங்களில் அடிக்கடி ஏற்படும் திடீர் அனர்த்தங்கள் தொடர்பாக தோட்ட நிர்வாகங்களுடன் கலந்துரையாடி தேவையான ஒத்து ழைப்பை பெற்றுக் கொள்ள நடவ டிக்கை எடுக்கப்படும் என மஸ்கெலியா பிர தேச சபைத் தலைவர் ஏ.கே. ராஜ்குமார் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் பேசும் போது தெரிவித்தார்.

தலைவர் உட்பட 17 உறுப்பினர்களும் கலந்து கொண்ட அமர்வில் அவர் மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:–

மஸ்கெலியா பிரதேச சபையில் ஒவ் வொரு உறுப்பினருக்கும் ஒரு லட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. அந்த நிதியில் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கு தேவையான மின்குமிழ்களை அல்லது சூரியசக்தியில் இயங்கக் கூடிய மின்குமிழ் களை தெரிவு செய்து உறுப்பினர்கள் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கான கேள்விப் பத்திரம் கோரப்படவுள்ளது.

பிரதேச சபையில் கடமையாற்றும் ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை வழங்குவதற்கு பிரதேச சபை வருமானத் திலிருந்து 20 வீத நிதியைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள் ளதை நாம் ஆட்சேபிக்கிறோம். எம்மைப் போன்ற வருமானம் குறைந்த சபைகள் சிரமத்தை எதிர்நோக்குவதால் இது சம்பந்தமாக நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள ஜனதிபதிக்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

மஸ்கெலியா நகரத்தின் சகல வீதிக ளுக்கு பெயர்ப்பலகை பொருத்த உள்ளூ ராட்சி வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டம் தோட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும். மேலும் உபதலை வர் ராஜ் அசோக் மஸ்கெலியா பிரதேச சபை நிர்வாகத்துக்கு உட்பட்ட 35 பாட சாலைகளில் வார இறுதி நாள்களில் அறநெறிப் பாடசாலைகள் ஊடாக, மாணவர்களின் பண்புகளை மேம் படுத்த விழுமியக் கல்வியைத் தொடர வும், தரம்–5, க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்கு கருத்தரங்குகளை நடத்தவும் பிரேர ணையை முன்வைத்துள்ளார். அதை நடைமுறைப்படுத்த அடுத்த ஆண்டுக் கான வரவு– செலவுத் திட்டத்தில் கணிச மான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அத்தோடு எந்தக் காலத்திலும் இந்தத் திட்டத்தை கொண்டு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அம்பகமுவ பிரதேச சபையிலிருந்து பிரிக்கப்பட்டு மஸ்கெலியா புதிய பிரதேச சபை 2018 இல் உருவாக்கப்படிருந்தாலும் பிரதேச சபை கட்டடம் உட்பட முக்கிய மான நகரங்கள், இடங்கள் அனைத்தும் இன்னமும் அம்பகமுவ பிரதேச சபைக்கே சொந்தமாக உள்ளது. எனவே, அவற்றை எமது சபைக்கு பெற்றுக் கொள்ள உரிய அதிகாரிகளோடும், அமைச்சுகளோடும் தொடர்பு கொண்டு பிரித்தெடுக்க ஆவன செய்வோம்.

இந்த மாதத்தில் லக்ஸபான தேயி லைத் தொழிற்சாலை தீ விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளது, சாமிமலை ஓல் டன் தோட்டத்தில் வெள்ளப் பெருக்கும் மொக்கா தோட்டத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளன. மக்களுக்கு பாதுகாப்பும் நிவாரணமும் வழங்க வேண்டிய பொறுப்பு தோட்ட நிர்வாகங்களுக்கு இருப்பதால், தீபாவளிப் பண்டிகைக்குப் பிறகு, இது சம்பாந்தமாக தோட்ட நிர்வாகளுடன் சந்திப்பை மேற்கொண்டு ஆக்கபூர்வ மான நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது. – என்றார்.



# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 13 பேர் கரடியனாறுப் பகுதியில் கைது

## அதிரடிப்படை அதிரடி; 13 டிராக்டர்களும் மடக்கப்பட்டன

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கித்துள் முந்தனையாறு பகுதியில் சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களைக் கைது செய்யும் விசேட நடவடிக்கை ஒன்றை விசேட அதிரடிப்படையினர் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை மேற்கொண்டனர். இதன்போது அப் பகுதியை முற்றுகையிட்டு, சுற்றி வளைத்து, சட்டவிரோத மணல் அகழ் வில் ஈடுபட்ட 13 பேரைக் கைது செய்த மையுடன் 13 டிராக்டர்களையும் கைப் பற்றிப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ள னர்.

கிழக்கு மாகாண விசேட அதிரடிப் படையின் கட்டளைத் தளபதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கேசர ரத்தின வீர ஆலோசனையில், விசேட அதிர டிப்படையின் மட்டு. – அம்பாறை – பொலன் னறுவை வலய உதவி பொலிஸ் அத்தி யட்சகர் பி.கே.என்.குலதுங்கவின் வழி காட்டலில், அரந்தலாவை விசேட அதிர டிப்படை முகாம் பொறுப்பதிகாரிகள் சந்தனம் மற்றும் கிஸ்சிறி தலைமை யிலான அதிரடிப்படையினர் நேற்று அதிகாலை 2.00 மணிக்கு முந்தனை ஆற்று பகுதியை முற்றுகையிட்டனர்

இதன்போது சட்டவிரோதமாக மண் அகழ்ந்து டிராக்டர் பெட்டிகளில் ஏற்றிக் கொண்டிருந்த 13 பேரை மடக்கி பிடித்து கைது செய்தமையுடன் 13 டிராக்டர் களையும் மணலுடன் மீட்டு கைது செய்யப் பட்டவர்களை மீட்கப்பட்ட டிராக்டர்களுடன் கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைத் தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கித்துள் மற்றும் கரடியனாறு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை நீதி மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட் டத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நீண்ட காலமாக தொடர்ச்சியாக இடம் பெற்று வருவதாக பொதுமக்கள் குற்றச் சாட்டுக்கள் தெரிவித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் பன்றி வளர்ப்பு!

## உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

**(பாலநாதன் சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கோம்பாவில் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் பன்றிகளை வளர்த்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு சுகாதார பரிசோதகர்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டபோது, சம்பந்தப்பட்டவர் தனது வீட்டு வளாகத்தில் பத்திற்கும் அதிகமான பன்றிகளை சுகாதாரமற்ற சூழலில் வளர்த்துவருவது



தெரியவந்துள்ளது.

மேலும், பன்றிகளின் மலக்கழிவுகள் முறையாக அகற்றப்படாமல் சுற்றுப்புறத்திலேயே வெளியேற்றப்பட்டு துர்நாற்றம் வீசும் நிலை ஏற்பட்டிருப்பதும், சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டிருப்பதும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, பொது சுகாதார பரிசோதகர்கள் பன்றி உரிமையாளருக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இதற்கமைய, நீதிவான் எதிர்வரும் 24 ஆம் திகதி சம்பந்தப்பட்டவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

இந்நடவடிக்கையில் கோம்பாவில் பொது சுகாதார பரிசோதகர் ஆ.சுரேஸ் ஆனந்தன் தலைமையில், பொது சுகாதார பரிசோதகர் பிரதாஸ் மற்றும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ரதன் ஆகியோர் இணைந்து செயல்பட்டுள்ளனர்.

# அகில இலங்கை முஸ்லீக் லீக் வாலிப முன்னணியின் விசேட கூட்டமும் கௌரவிப்பும் நாளை ஞாயிறன்று

**(றிபாஸ்)**

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை மாவட்ட சம்மேளத்தின் விசேட கூட்டமும், கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை 19 ஆம் திகதி ஒலுவில் மஸாலா காடனில் நடைபெறவுள்ளது.

மாவட்ட தலைவர் ஏ.பைறுஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப்பணிப்பாளர்.ஏ.எச். பௌஸ் பிரதம அதிதியாகவும், ஏ. ஆர்.பீ. உரிமையாளர் கே.எல். அப்துல் ர/ஹமான் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை அரச பணியிலிருந்து ஓய்வு பெற்ற அமைப்பின் ஆலோசகர்




எம்.எஸ்.எம். அப்துல் மலீக், அஞ்சல் திணைக்களத்தில் பதவியுர்வு பெற்ற யூ.எல்.எம்.பைசர் மற்றும் கே.நிஹால், எம். பீ. சம்சுடீன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு அமைப்பின் இலச்சனை பொறிக்கப்பட்டுள்ள றிசேர்ட் வழங்கி வைக்கப்படவுள்ளதாக மாவட்ட நிறைவேற்றுப்பணிப்பாளர் எம். ஐ. உதுமா லெவ்வை தெரிவித்துள்ளார்.

# வவுனியா தெற்கில் ஆழ்துளை கிணறு அமைக்க பிரதேச சபையின் அனுமதி பெறுவது கட்டாயம்

## தவிசாளர் பா.பாலேந்திரன் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் ஆழ்துளை கிணறுகளை அமைக்கும் போது பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாக சபையின் தவிசாளர் பா.பாலேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீரை பாதுகாக்கும் நிமித்தம் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதை தடைசெய்வது தொடர்பாக கடந்த




சபை அமர்வில் கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய சில காணிகளில் பாறைகள் உள்ளமையால் சாதரண கிணறுகள் அமைக்க முடியாத சந்தர்ப்பங்களும் பொதுமக்களுக்கு ஏற்படுகின்றன. இதேவேளை சில பகுதிகளில் 200 அடிவரை ஆழ்துளை கிணறுகளை அமைக்கின்றனர். இவ்விடயங்கள் தொடர்பாக நாம் ஆராய்ந்துள்ளோம்.

எனவே, இவற்றை கருத்தில் கொண்டு நிலத்தடி நீரை பாதுகாக்கும் நோக்குடன் இனிவரும் காலங்களில் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதாயின் பிரதேச சபையின் அனுமதியினையும் பெறுமாறு வலியுறுத்தி தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்கான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. – என்றார்.




# மன்னார் மாவட்ட இளம் மீனவருக்கு நேற்று விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(மன்னார் நிருபர்)

இளம் மீனவர்களை வலுப்படுத்துதல் மற்றும் சட்டவிரோத மீன்பிடி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், இளம் மீனவர்களுக்கான கருத்தமர்வு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை, மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட கடற்றொழில் அலுவலர் இ.றொபின் ஜூட் வளவாளராக கலந்து கொண்டு கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் சார்ந்த சட்டங்கள், மீன்பிடிக்கு பயன்படுத்தத் தடை செய்யப்பட்ட உபகரணங்கள், அனுமதியின்றி சங்குகள் வைத்திருத்தல், பிடிப்பதற்கு தடை செய்யப்பட்ட கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் மீன்பிடிக்கான அனுமதிப் பத்திரங்கள் தொடர்பில் இளம் மீனவர்களுக்குத் தெளிவுப்படுத்தினார்.

இக் கலந்துரையாடல் தொடர்பில், மெசிடோ (ஆளுநுனுழு) நிறுவனத்தின் இயக்குநர் கருத்து தெரிவிக்கையில் –

“வடக்கு, கிழக்கைப் பொறுத்த வரையில் மீனவ சமூகம் என்பது அதி முக்கியமான ஒன்றாகும். இன்றைய காலகட்டத்தில் கடல் வளங்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இயற்கையாகவும் செயற்கையாகவும், பல்வேறு வடிவங்களில் அழிக்கப்பட்டு வருகின்றன.

“அந்த வளங்களைக் காப்பாற்றுவதற்காகவே சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மீனவ சமூகங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இளம் மீனவர்களை வளங்களைப் பாதுகாத்து பொறுப்புணர்வுடன் செயல்படும் வகையில் ஊக்குவிக்கும் முகமாக, வடக்கு – கிழக்கு இளம் மீனவர்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கு தெளிவூட்டல்களை இவ்வாறான கருத்தரங்குகள் மூலம் வடக்கு கிழக்கின் பல இடங்களிலும் முன்னெடுத்து வருகிறோம்.” – என்று தெரிவித்தார்.

இந்தக் கருத்தமர்வில், மெசிடோ நிறுவனத்தின் இயக்குனர் ஜாட்சன் பிகிராடோ, திட்ட முகாமையாளர் சூ.செ. ஜான்சன், திட்ட இணைப்பாளர் ஜூலியஸ், நிர்வாக அலுவலர் கரோலின் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்கள் கலந்து கொண்டமையோடு மன்னார் மாவட்ட மீனவர்கள் மற்றும் இளம் மீனவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.





# சமளங்குளம் வட்டாரத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சமளங்குளம் வட்டாரத்திலுள்ள பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்றைய தினம் எல்லப்பர் மருதங்குளம் கிராமிய அபிவிருத்திடச் சங்கப் பொதுநோக்கு மண்டபத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பில் ஈடுபட்டார்.

பல்வேறு பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இதன்போது மக்களால் தெரியப்படுத்தப்பட்டது. பாடசாலைகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறை, குளப்புனரமைப்பு, வனவள திணைக்களத்தினரால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகள், உள்ளக வீதித்திருத்தங்கள், வீதி விளக்குகளின் தேவைப்பாடுகள் ஆகியன தொடர்பில் விசேடமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்போது வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் உறுப்பினர் திருமதி. தர்சினி கேதீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் தெற்கு பிரதேசக்கிளையின் தலைவர் அ.தாவீது சீலன் ஆகியோரும் இணைந்திருந்தனர்.









# த.வெ.க. அங்கீகரிக்கப்பட்ட கட்சி அல்ல: நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தகவல்

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்–கழகம் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி அல்ல என இந்திய தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் செல்வகுமார் என்பவர் தாக்கல் செய்த மனுவில், கரூரில் தமிழக வெற்றிக் கழகம் கட்சித் தலைவர் விஜய் பிரசாரத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் என 41 பேர் பலியாகியுள்ளனர். அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கு பெண்கள், குழந்தைகள் என கூட்டம் கூட்டுவது மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், தேர்தல் நடத்தை விதிகளுக்கு முரணானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்எம் ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி அருள்முருகன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தபோது, தமிழக வெற்றிக் கழகம் கட்சி அங்கீகரிக்கப்படாத கட்சி என்பதால் அந்தக் கட்சியின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுப்ப முடியாது என தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, மனுவுக்கு பதில் அளிக்கும்படி தமிழக அரசுக்கும் டிஜிபிக்கும் உத்தரவிட்ட நீதிபதிகள், மனுவில் எழுப்பப்பட்டுள்ள சில கோரிக்கைகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குடன் தொடர்புடையதாகவும், சில கோரிக்கைகள் வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக உள்ளதாலும், உச்ச நீதின்றத்தின் உத்தரவின் அடிப்படையில் வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பான வழக்கை விசாரிக்க அமைக்கப்பட உள்ள சிறப்பு அமர்வு முன்பு இந்த மனுவை விசாரணைக்கு பட்டியலிட வேண்டும் என உத்தரவிட்டனர்.

மேலும், கரூர் துயர சம்பவத்தை சுட்டிக்காட்டி அரசியல் கட்சிகளின் “ரோட் ஷோ“ நிகழ்ச்சிகளுக்கு வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கக் கோரிய அனைத்து வழக்குகளையும் ஒரே அமர்வு விசாரிக்கும் என்றும் தலைமை நீதிபதி அமர்வு தெரிவித்துள்ளது.

# குஜராத் துணை முதல்வராக ஹர்ஷ் சிங்வி பதவியேற்றார்

## மேலும் 25 பேர் அமைச்சர்களாக பதவியேற்பு



குஜராத் துணை முதல்வராக ஹர்ஷ் சிங்வி பதவியேற்றுள்ளார். அவருடன் மேலும், 25 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் தலைமையிலான அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த அமைச்சர்கள் அனைவரும் நேற்று திடீரென இராஜினாமா செய்தனர். இதையடுத்து, நேற்று முன்தினம் ஆளுநர் ஆச்சார்ய தேவ விரத்தைச் சந்தித்த முதல்வர் பூபேந்திர படேல், புதிய அமைச்சரவையை அமைக்க உரிமை கோரினார்.

அவரது கோரிக்கை ஏற்கப்பட்டதை அடுத்து, புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்றது. இதில் சூரத்தைச் சேர்ந்த, குஜராத்தின் முன்னாள் உள்துறை அமைச்சரான ஹர்ஷ் சிங்வி, துணை முதல்வராக பதவியேற்றார். தற்போது அவருக்கு 40 வயது என்பதால், குஜராத்தின் துணை முதல்வராகப் பதவியேற்ற இளம் தலைவர் என்ற பெயரை பெற்றுள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாக, கிரிக்கெட் வீரர் ரவீந்திர ஜடேஜாவின் மனைவி ரிவாபா ஜடேஜா அமைச்சராக பதவியேற்றுள்ளார். ஸ்வரூப் தாக்கூர், பிரவின் பாய் மாலி, ருஷிகேஷ் படேல், தர்ஷ்னா வகேலா, குன்வர்ஜி பவாலியா, அர்ஜுன் மோத்வாடியா, பர்ஷோத்தம் சோலங்கி, ஜிதேந்திர வகானி, பிரஃபுல் பன்ஷேரியா, கனு தேசாய் உள்ளிட்ட பலர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

புதியஅமைச்சரவையில்8பேர்அமைச்சரவை அமைச்சர்களாகவும், 2 பேர் தனிப் பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்களாகவும், 6 பேர் இணை அமைச்சர்களாகவும் பதவியேற்றுள்ளனர்.

குஜராத்தில் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 182 தொகுதிகளில் 162 இடங்களில் வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் பா.ஜ.க. ஆட்சி செய்து வருகிறது. இங்கு பிரதான எதிர்க்கட்சியான காங்கிரசுக்கு 12 எம்.எல்.ஏக்கள் மட்டுமே உள்ளனர். குஜராத்தின் அடுத்த சட்டப்பேரவைத் தேர்தல் 2027 ஆம் ஆண்டு நடைபெற உள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வருடங்கள் உள்ள நிலையில், திடீர் திருப்பமாக அமைச்சரவை மாற்றம் நிகழ்ந்துள்ளது. குஜராத்தில் இன்னும் சில மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இந்த மாற்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.



# ஆப்கானிஸ்தான் எல்லை அருகே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## 7 பாகிஸ்தான் வீரர்கள் மரணம்

ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகே நேற்று வெள்ளிக்கிழமை நடந்த தற்கொலைத் தாக்குதலில் 07 பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டனர் என இஸ்லாமபாத் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்லாமாபாத் – காபூல் இடையேயான பலவீனமான போர்நிறுத்தம் முன்னாள் நட்பு நாடுகளுக்கு இடையேயான கடுமையான மோதலை நிறுத்திய நிலையில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் உடன் தொடர்புடைய ஒரு தற்கொலை கார் குண்டுதாரி வடக்கு வசிரிஸ்தானின் மிர் அலியில் உள்ள பாதுகாப்புப் படைவளாகத்தில் மோதியதாகவும், துப்பாக்கிச் சண்டையில் மூன்று போராளிகள் கொல்லப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மிகப்பெரிய குண்டுவெடிப்பு அருகிலுள்ள வீடுகளை சேதப்படுத்தியது.

மேலும், சம்பவ இடத்திலிருந்து வந்த காணொளிகள் வானத்தில் அடர்த்தியான புகை மூட்டங்கள் வீசுவதைக் காட்டியது.

ஒரு வாரமாக நீடித்த தீவிர எல்லைச் சண்டையில் இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து புதன்கிழமை இரு நாடுகளுக்கு இடையிலும் 48 மணிநேர போர் நிறுத்தமானது அமுலுக்கு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தென் பிலிப்பைன்ஸில் 6.1 ரிச்டர் நிலநடுக்கம்



தென் பிலிப்பைன்ஸில் நேற்று வெள்ளிக்கிழமை 17 6.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸை இரண்டு சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் தாக்கி ஒரு வாரத்தின் பின்னர் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

நிலக்கத்தால் உயிரிழப்புகள் சேதம் தொடர்பில் எந்த தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை.

“திடீரென வலுவான ஒரு நிலநடுக்கத்தை நாங்கள் உணர்ந்தோம், ஆனால் அது மிகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே இருந்தது,” என மாகாண அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மீட்பு அதிகாரி ரால்ப் கேடலேனா கடலீனா தெரிவித்துள்ளார்.

சூரிகாவ் டெல் நோர்டே மாகாணத்தில் உள்ள டாபா நகராட்சிக்கு அருகில் சுமார் 69 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மிண்டானாவ் தீவின் கிழக்குப் பகுதியில் 7.4 மற்றும் 6.7 ரிச்டர் அளவிலான இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டு சுமார் எட்டு பேர் உயிரிழந்து ஒரு வாரம் கழித்து இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

மத்திய பிலிப்பைன்ஸில் உள்ள செபு மாகாணத்தில் சில நாள்களுக்கு முன்னர் பதிவான 6.9 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக அரசாங்க புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.



# பங்களாதேஷ் அரசாங்கத்துக்கு எதிராக மீண்டும் வெடிக்கும் மக்கள் போராட்டம்

பங்களாதேஷில் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசாங்கம், நேற்று ஜூலை சாசனத்தில் கையெழுத் திட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நூற்றுக்கணக்கான மக்கள் நாடாளு மன்ற வளாகத்தில் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டத்தை கட்டுப் படுத்த மக்களை கலைந்து செல்லு மாறு பொலிஸ் வலியுறுத்தியதாக தெரி விக்கப்படுகின்றது.

இதன்போது, இந்த போராட்டத்தில் பதற்றநிலைஏற்பட்டதைதொடர்ந்து,பொலி ஸாரால் கண்ணீர் புகைக்குண்டு கள் வீசப்பட்டதாகவும், போராட்டக்காரர் களை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்ட தாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரி விக்கின்றன.

புதிய சாசனம் தங்களது கவலைகளை நிவர்த்தி செய்யவில்லை எனக் கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பங்களாதேஷில் கடந்த வருடம் ஜூலை மாதம் ஷேக் ஹசீனா அரசாங்கத்திற்கு எதிராக திடீரென இளைஞர்கள் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

இதில் காவல்துறையினரின் வாக னங்கள் சேதமாக்கப்பட்டன.

மேலும், இராணுவ வீரர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், அதில் ஏராளமானோர் காயமடைந்தனர்.

இதனால் ஷேக் ஹசீனா, பிரதமர் பதவியிலிருந்து விலகியமை குறிப் பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 18.10.2025




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். தோள் வழிப் பிரச்சினைக்கு ஆளாகலாம்.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.10.2025




இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும்.




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.

# சம்பள நிர்ணய சபையைப் புறக்கணித்தமைக்காக முதலாளிமார் சம்மேளனத்துக்குக் கடும் கண்டனம்

## இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான பேச்சுவார்த்தை சம்பள நிர்ணய சபையில் நேற்று இடம்பெற்ற நிலையில், இதில் தொழிற்சங்க ரீதியாக அனைவரும் கலந்து கொண்ட போதும், முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் எவரும் கலந்துக்கொள்ளாதமை பெரும் வேதனை அளிப்பதோடு, அது கண்டிக்கத்தக்க விடயம் எனவும் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கம்பனியின் வளர்ச்சிக்காக தோட்டங்களில் முழுமையாக பாடுபடும் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் தொடர்ந்தும் தான்தோன்றித்தனமாக செயற்படும் கம்பனிகளை கடுமையாக கண்டிக்கிறோம்.




மேலும், தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் முதலாளிமார் சம்மேளனம் தொடர்ந்தும் அலட்சிய போக்கைக் கடைப்பிடித்து வருகிறது . கம்பனிக்கு எதிராகப் போராட்டம் நடத்தித்தான் சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றால் அதற்கும் இ.தொ.கா. தயார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் தொழில் அமைச்சின் முயற்ச்சி வரவேற்கத்தக்கது. அம்முயற்சிக்கு அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.